13002

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

33 T I

21.08.2018 / 0830 - 1030

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் உரித்தாகும்.

※ உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.

சுட்டெண் : ....

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

	ஒப்பம்	குறியீட்டெண்
1 ஆவது பரீட்சகர்		
2 ஆவது பரீட்சகர்		
மேலதிக/பிரதம பரீட்சகர்		
எண்கணிதப் பரிசோதகர்		
பிரதம பரீட்சகர்		

வினாத்தாள் I இற்காக	
வினா இல.	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

1. நிறுவனமொன்றினால் தயாரிக்கப்படும் பொது நோக்கத்துக்கான நிதிக் கூற்றுகள் தொடர்பில் பின்வருவனவற்றுள் எக்கூற்று/கூற்றுகள் **சரியானது/சரியானவை** ?

A - அவை நிறுவனமொன்றின் கடந்த கால நிதித் தகவல்களைப் பிரதானமாக வழங்குகின்றன.
B - அவை வெளிப் பாவனையாளர்களின் கோரிக்கையின் பேரில் தயாரிக்கப்படுகின்றன.
C - அவை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்படுகின்றன.

(1) A மாத்திரம்
(2) A, B ஆகியன மாத்திரம்
(3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம்
(5) A, B, C ஆகியன எல்லாம் (......)

● **2, 3, 4 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிமலன் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.

* 01.03.2018 - உபேந்திரனிடமிருந்து கடனுக்கு ரூ. 150 000 கிரயமான சரக்குகள் கொள்வனவு
* 05.03.2018 - உபேந்திரனுக்கு ரூ. 30 000 கிரயமுடைய சரக்குகள் திருப்பி அனுப்புதல்
* 20.03.2018 - ரூ. 100 000 கிரயமுடைய சரக்குகள் ரூ. 160 000 இற்கு கடனுக்கு விற்பனை
* 20.03.2018 - ரூ. 10 000 ஆன விற்பனைத் தரகுக் கொடுப்பனவு
* 02.04.2018 - உபேந்திரனுக்குச் செலுத்த வேண்டிய முழுத் தொகையைக் கொடுத்துத் தீர்த்தல்

2. 31.03.2018 இல் உள்ளவாறான நிமலன் வியாபாரத்தில் மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் **தேறிய தாக்கத்தினைக்** காட்டும் கணக்கீட்டுச் சமன்பாடு :

	சொத்துக்கள் (ரூ.)	= பொறுப்புக்கள் (ரூ.)	+ உரிமையாண்மை (ரூ.)
(1)	+50 000	–	+50 000
(2)	+60 000	–	+60 000
(3)	+170 000	+120 000	+50 000
(4)	+170 000	+150 000	+20 000
(5)	+180 000	+120 000	+60 000

(......)

3. மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக 31.03.2018 இல் உள்ளவாறான நிமலனின் வியாபாரத்தின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியவற்றின் மீதிகளில் ஏற்படும் **அதிகரிப்பு :**

	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ.)	**கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ.)**
(1)	20 000	150 000
(2)	20 000	160 000
(3)	120 000	150 000
(4)	120 000	160 000
(5)	150 000	160 000

(……)

4. **உபேந்திரனுடனான** கொடுக்கல் வாங்கல்களை அவை இடம்பெற்றதன்படி நிமலனின் வியாபாரத்தின் புத்தகங்களில் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களின் ஒழுங்குவரிசை :

(1) விலைப்பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(2) விலைப்பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) விலைப்பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு
(4) விலைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு
(5) விலைப்பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு (……)

5. பின்வரும் கூற்றுகளுள் பொதுப்பேரேடு தொடர்பில் எது/எவை **சரியானது/சரியானவை** ?

A - நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கலானது ஆரம்பத்தில் பொதுப் பேரேட்டில் பதியப்படுகின்றது.
B - இரட்டைப்பதிவு முறை அடிப்படையில் நிறுவனமொன்றினால் பராமரிக்கப்படும் எல்லாக் கணக்குகளினதும் தொகுப்பு பொதுப் பேரேடாகும்.
C - நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள், மூலப் பதிவேடுகளில் பதியப்பட்ட பின்னர் பொதுப் பேரேட்டுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.
D - நிறுவனமொன்றின் பொதுப் பேரேட்டில் காணப்படும் எல்லாக் கணக்குகளுக்கும் கணக்கீட்டுக் கால முடிவில் மூடும்பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

(1) A மாத்திரம் (2) B, C மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம். (……)

6. வணிகமொன்றினால் நிதியாண்டொன்றில் உழைத்த இலாபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமன்பாடு :

(1) வருட முடிவில் உரிமையாண்மை + பற்றுக்கள் + அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் − வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
(2) வருட முடிவில் உரிமையாண்மை + பற்றுக்கள் − அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் − வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
(3) வருட முடிவில் உரிமையாண்மை − பற்றுக்கள் + அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் − வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
(4) வருட முடிவில் உரிமையாண்மை − பற்றுக்கள் − அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் − வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
(5) வருட முடிவில் உரிமையாண்மை + பற்றுக்கள் + அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் + வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை (……)

7. நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பிரயோகிப்பது தொடர்பில் பின்வரும் எந்தக் கூற்று/கூற்றுகள் **சரியானது/சரியானவை** ?

A - அலகுசார் எண்ணக்கருவுக்கு இணங்க நிதிக் கூற்றுகளில் உரிமையாண்மையானது தனியான மூலமாக இனங்காணப்படுகிறது.
B - தொடர்ந்து இயங்குதல் எண்ணக்கருவானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நிதிக் கூற்றுகளில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதவை என வகைப்படுத்துவதற்கான அடிப்படையை வழங்குகிறது.
C - வருமானக் கூற்றில் ஒவ்வொரு காலத்துக்குமான பெறுமானத்தேய்வினை இனங்காண்பதானது இணைத்தல் எண்ணக்கரு அடிப்படையிலானதாகும்.

(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம். (……)

8. இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி நிதிக் கூற்றுகளின் மூலங்களை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அளவீட்டு அடிப்படைகள் பின்வருவனவற்றுள் எவை ?

A - வரலாற்றுக் கிரயம் B - நியாயப் பெறுமதி
C - தேறக்கூடிய பெறுமதி D - நிகழ்காலப் பெறுமதி

(1) A, B மாத்திரம் (2) A, C மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) A, B, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம். (……)

[பக். 3 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

13002

9. LKAS 17 (குத்தகை) இன்படி குத்தகைகளை நிதி மற்றும் செயற்பாட்டுக் குத்தகைகளாக வகைப்படுத்துவதன் மூலம் **மிகவும்** பாதுகாக்கப்படும் கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் குணாதிசயம்:

(1) ஒப்பிடக்கூடிய தன்மை (2) உண்மையான பிரதிநிதித்துவம்
(3) காலந் தவறாமை (4) விளங்கிக் கொள்ளக்கூடிய தன்மை
(5) உறுதிப்படுத்தக்கூடிய தன்மை (......)

10. நலன்புரிச் சங்கம் ஒன்றினால் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுகளின் கூறுகளாகப் பின்வருவனவற்றுள் எவை கருதப்படும் ?

A - திரண்ட நிதிக் கணக்கு B - நிதி நிலைமைக் கூற்று
C - காசுப் பாய்ச்சல் கூற்று D - சந்தாக் கணக்கு
E - வருமானச் செலவுக் கணக்கு

(1) A, D மாத்திரம் (2) B, C மாத்திரம் (3) A, D, E மாத்திரம்
(4) B, C, E மாத்திரம் (5) A, B, E மாத்திரம் (......)

● **11, 12 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காகக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

நிறுவனமொன்றின் பொதுப் பேரேட்டில் காணப்படும் 31.03.2018 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது ரூ. 500 000 ஆக இருந்தது. எனினும், இம்மீதியானது அத்தினத்திலுள்ள கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தத்துடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி பின்வருவன வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன.

(i) 2018 மார்ச் மாதத்தில் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 180 000 காசோலைகளானது காசுப் பெறுவனவு நாளேட்டிலும் கடன்பட்டோர் பேரேட்டிலுள்ள அது தொடர்பான கணக்குகளிலும் மாத்திரம் பதியப்பட்டுள்ளது. எனினும் இது பொதுப் பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை.
(ii) ரூ. 520 000 கடன் விற்பனையானது ரூ. 250 000 ஆக விற்பனை நாளேட்டில் பதியப்பட்டுள்ளது. எனினும், இது கடன்பட்டோர் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.
(iii) பதிவழிக்கப்பட்ட ரூ. 50 000 அறவிடமுடியாக் கடனானது பொதுப் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டுள்ளது. எனினும், இது கடன்பட்டோர் பேரேட்டில் காணப்படும் அது தொடர்பான கடன்பட்டோர் கணக்கில் பதியப்படவில்லை.
(iv) கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து மீதிகளைப் பிரித்தெடுக்கும்போது ரூ. 80 000 மீதியொன்று விடுபட்டிருந்தது.

11. மேற்கூறப்பட்ட வழுக்களைச் சரிசெய்வதற்கு முன்னர் கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம்:

(1) ரூ. 440 000 (2) ரூ. 470 000 (3) ரூ. 560 000
(4) ரூ. 590 000 (5) ரூ. 620 000 (......)

12. 31.03.2018 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதி:

(1) ரூ. 440 000 (2) ரூ. 470 000 (3) ரூ. 560 000
(4) ரூ. 590 000 (5) ரூ. 620 000 (......)

13. சில்லறை வியாபாரம் ஒன்றின் வருமானக் கூற்றில் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

விபரம்	**ரூ.'000**
விற்பனைகள்	2 000
உழைத்த வட்டி	250
மோட்டார் வாகன விற்பனை மீதான ஆதாயம்	150
வட்டிச் செலவுகள்	300
செயற்பாட்டுச் செலவுகள்	500
விற்பனைக் கிரயம்	1 200
பற்றுக்கள் - சரக்குகள்	200

இந்த வியாபாரத்தினால் இனங்காணப்பட வேண்டிய 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவுகள்:

	மொத்த வருமானம் (ரூ.'000)	**மொத்தச் செலவுகள் (ரூ.'000)**
(1)	1 200	800
(2)	1 200	1 000
(3)	2 250	2 000
(4)	2 400	2 000
(5)	2 400	2 200

(......)

● **14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

நவீனன், சாந்தன் ஆகியோரின் பங்குடைமை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு :

31.03.2017 இல் உள்ளவாறான மீதிகள்	நவீனன் (ரூ.'000)	சாந்தன் (ரூ.'000)
மூலதனக் கணக்குகள்	800	500
நடைமுறைக் கணக்குகள்	200	100

01.04.2017 இல் நவீனன் மேலதிக மூலதனமாக ரூ. 200 000 ஐயும் சாந்தன் கடனாக ரூ. 500 000 ஐயும் காசாக பங்குடைமைக்கு வழங்கினர். இக்கடனுக்கான வருடாந்த வட்டி 5% ஆவதுடன் இது சாந்தனின் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்படும்.

நவீனன் மற்றும் சாந்தன் ஆகியோருக்கிடையே இலாப நட்டங்கள் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் பகிரப்படுவதுடன் பங்காளர்கள் தமது இறுதி மூலதன மீதிகளின் மீது 10% வருடாந்த வட்டியைப் பெறுவதற்கும் உரித்துடையவர்கள்.

31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடைமையின் இலாபம் ரூ. 500 000 ஆகும். இவ்வருடத்தில் நவீனன், சாந்தன் ஆகியோர் பங்குடைமையிலிருந்து முறையே ரூ. 100 000, ரூ. 50 000 காசாகப் பற்றியுள்ளனர். இவற்றைத் தவிர வேறு எந்தக் காசு மீளப் பெறுகைகளும் பங்காளர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

14. 31.03.2018 இல் உள்ளவாறான இப்பங்குடைமையின் உரிமையாண்மை :

(1) ரூ. 1 350 000 (2) ரூ. 1 500 000 (3) ரூ. 1 650 000
(4) ரூ. 2 175 000 (5) ரூ. 2 300 000 (......)

15. பங்காளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் மூலம் 31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய காசும் 31.03.2018 இல் உள்ளவாறான சாந்தனின் நடைமுறைக் கணக்கும் :

	பெற்ற தேறிய காசு (ரூ.)	சாந்தனின் நடைமுறைக் கணக்கு மீதி (ரூ.)
(1)	50 000	265 000
(2)	50 000	410 000
(3)	550 000	265 000
(4)	550 000	315 000
(5)	550 000	410 000

(......)

16. பின்வரும் தகவல்கள், பெறுமதி சேர் வரி (VAT) பதிவினைக் கொண்ட கம்பனி ஒன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்றுடன் தொடர்புடையனவாகும்.

திகதி	விபரம்	தொகை (ரூ.)
01.04.2017	இயந்திர இறக்குமதி (15% VAT உடன்)	575 000
15.04.2017	இயந்திரத்தைக் கம்பனிக்குக் கொண்டுசெல்லல்	40 000
30.04.2017	இடத்தைத் தயார்செய்தலும் இயந்திரத்தை நிறுவுதலும்	60 000
15.05.2017	இயந்திரத்தைப் பரீட்சார்த்த ஓட்டம் பார்த்தலும் அது முறையாகத் தொழிற்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தலும்	80 000
15.05.2017	பரீட்சார்த்த ஓட்டத்தின்போது உற்பத்தி செய்யப்பட்ட உருப்படிகளின் விற்பனைகளில் இருந்து பெற்ற காசு	30 000
30.06.2017	தொடக்க விழாவை நடாத்துதல்	20 000

LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி இனங்காணலின்போது இயந்திரத்தின் கிரயம் மற்றும் இயந்திரத்துக்கான பெறுமானத்தேய்வினை ஆரம்பிக்கும் திகதி :

	கிரயம் (ரூ.)	திகதி
(1)	540 000	15.04.2017
(2)	650 000	15.05.2017
(3)	650 000	30.06.2017
(4)	725 000	30.06.2017
(5)	755 000	15.05.2017

(......)

[பக். 5 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

13002

17. கணேஷ் PLC நிறுவனம் 01.04.2017 இல் நிதிக் குத்தகையில் மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தது. இத்திகதியில் மோட்டார் வாகனத்தின் நியாயப் பெறுமதி ரூ. 5 400 000 ஆகக் காணப்பட்டதுடன் அதே தினத்தில் ரூ. 1 400 000 முதல் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டின் மார்ச் 31 இலும் வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணமாக ரூ. 1 262 000 தொடர்ந்து 4 ஆண்டுகளுக்குச் செலுத்தப்படல் வேண்டும். 31.03.2018 இல் முதலாவது தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது. குத்தகையில் உள்ளடங்கியுள்ள வட்டி வீதம் வருடாந்தம் 10% ஆகும்.

LKAS 17 (குத்தகை) இன்படி 31.03.2018 இல் உள்ளவாறானு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாகவும் நடைமுறையல்லாப் பொறுப்பாகவும் சமர்ப்பிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்பு:

	நடைமுறைப் பொறுப்பு (ரூ.)	நடைமுறையல்லாப் பொறுப்பு (ரூ.)
(1)	862 000	2 189 800
(2)	862 000	3 138 000
(3)	948 200	2 189 800
(4)	948 200	3 138 000
(5)	1 262 000	1 876 000

(……)

● **18, 19 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான அஜித் PLC நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

விபரம்	ரூ.
விற்பனைப்புரள்வு	800 000
விற்பனைக் கிரயம்	300 000
நிர்வாக மற்றும் விநியோகச் செலவுகள்	80 000
மீள் மதிப்பீட்டின் மிகை/பற்றாக்குறை:	
காணி	60 000
இயந்திரம்	100 000
அலுவலக உபகரணம்	(75 000)

31.03.2018 இல் சகல ஆதனம், பொறி, உபகரணங்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. காணியானது முதலாவது தடவை மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இயந்திரங்களும் அலுவலக உபகரணங்களும் இரண்டாவது தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் முதலாவது தடவையாக 31.03.2016 இல் மீள் மதிப்பீடு செய்யப்பட்டபோது முறையே ரூ. 30 000 பற்றாக்குறையும், ரூ. 40 000 மிகையும் ஏற்பட்டுள்ளது. கம்பனியின் மொத்தச் சொத்துக்களும் உரிமையாண்மையால் நிதியிடப்பட்டுள்ளதுடன் கம்பனியானது வருமானவரி செலுத்த வேண்டியதில்லை.

18. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான இந்தக் கம்பனியின் மொத்த வருமானம் மற்றும் மொத்த முற்றும் அடங்கிய வருமானம் :

	மொத்த வருமானம் (ரூ.)	மொத்த முற்றும் அடங்கிய வருமானம் (ரூ.)
(1)	900 000	160 000
(2)	930 000	505 000
(3)	960 000	505 000
(4)	960 000	580 000
(5)	1 000 000	160 000

(……)

19. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான இக்கம்பனியின் இலாபம் மற்றும் ஏனைய முற்றும் அடங்கிய வருமானம் :

	இலாபம் (ரூ.)	ஏனைய முற்றும் அடங்கிய வருமானம் (ரூ.)
(1)	345 000	90 000
(2)	345 000	130 000
(3)	385 000	160 000
(4)	415 000	90 000
(5)	415 000	130 000

(……)

[பக். 6 ஐப் பார்க்க

20. சாரங்கன் PLC நிறுவனமானது ஆடைகளை வாங்கி விற்பதில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான சுருக்கிய காசுக் கணக்கு கீழே தரப்படுகின்றது.

காசுக் கணக்கு (ரூ.)

மீதி - 01.04.2017	70 000	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	720 000
விற்பனைகள்	850 000		
கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	550 000	கொடுக்குமதியான வாடகைச் செலவுகள்	40 000
பங்கிலாப வருமானம்	10 000		
வங்கிக் கடன்	500 000	விநியோகச் செலவுகள்	180 000
		நிர்வாகச் செலவுகள்	270 000
		மோட்டார் வாகனக் கொள்வனவு	560 000
		வருமானவரி	125 000
		மீதி 31.03.2018	85 000
	1 980 000		**1 980 000**

LKAS 7 (காசுப் பாய்ச்சல்கள் கூற்று) இன்படி 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல்:

(1) ரூ. 65 000 (2) ரூ. 75 000 (3) ரூ. 85 000
(4) ரூ. 115 000 (5) ரூ. 190 000 (……)

21. 31.03.2017 இல் உள்ளவாறான நிர்மலா PLC நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளில் இருந்து பின்வரும் மீதிகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

விபரம்	**ரூ.**
கூறப்பட்ட மூலதனம் - ஒவ்வொன்றும் ரூ. 10 வீதம் வழங்கப்பட்ட 80 000 சாதாரண பங்குகள்	800 000
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	300 000
நிறுத்தி வைத்த வருவாய்கள்	450 000

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தில் கம்பனியால் செய்யப்பட்ட பங்கு வழங்கல்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு இருந்தது.

திகதி	**விபரம்**
01.05.2017	ஒவ்வொன்றும் ரூ. 15 ஆன 20 000 பங்குகள் பொது வழங்கலாகச் செய்யப்பட்டது. 25 000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. விகிதாசார அடிப்படையில் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.
01.01.2018	01.04.2017 இல் காணப்பட்ட ஒவ்வொரு நான்கு பங்குகளுக்கும் ஒரு பங்கு வீதம் பங்கு ஒன்று ரூ. 20 இல் வழங்கி நிறுத்தி வைத்த வருவாயானது மூலதனமாக்கப்பட்டது.

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் ரூ. 600 000 ஆகும்.
31.03.2018 இல் உள்ளவாறான கம்பனியின் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் மற்றும் உரிமையாண்மை:

	கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (ரூ.)	**உரிமையாண்மை (ரூ.)**
(1)	1 100 000	1 850 000
(2)	1 100 000	2 525 000
(3)	1 500 000	2 450 000
(4)	1 500 000	2 850 000
(5)	1 600 000	2 925 000

(……)

22. அஞ்சலி PLC இன் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுகள் இயக்குனர்களால் 15.05.2018 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் இக்கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டமானது 30.05.2018 இல் நடைபெற்றுள்ளது. பின்வரும் நிகழ்வுகள் கம்பனியில் 31.03.2018 இன் பின்னர் இடம்பெற்றுள்ளன.

A - 10.04.2018 இல் ஏற்பட்ட தீயின் காரணமாக ரூ. 1 000 000 கிரயமான கட்டடம் அழிவடைந்துள்ளது.

B - ரூ. 500 000 ஐத் தரவேண்டிய கடன்பட்டோர் ஒருவர் 05.05.2018 இல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். இக்கடன்பட்டோரின் மீதியானது 05.04.2018 இல் செய்யப்பட்ட விற்பனை காரணமாக ஏற்பட்டதாகும்.

C - 31.03.2018 இல் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கான செலுத்த வேண்டிய ரூ. 400 000 வரிமதிப்பீடானது இலங்கைச் சுங்கத்தினால் 10.05.2018 இல் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

LKAS 10 (அறிக்கையிடல் காலத்துக்குப் பின்னரான நிகழ்வுகள்) இன்படி இக்கம்பனியின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுகளில் மேற்படி எந்த நிகழ்வை/நிகழ்வுகளைச் சீராக்கம் செய்தல் வேண்டும் ?

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B மாத்திரம் (5) B, C மாத்திரம் (……)

[பக். 7 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

13002

23. பின்வரும் தகவல்கள் சமந்தா PLC இன் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

	ரூ.'000
விற்பனைகள் (எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையிலானவையாகும்.)	2 400
மொத்த இலாபம்	1 400
சராசரி சரக்கிருப்புகள்	200

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான கடன் சேகரிப்புக் காலம் 45 நாட்கள் ஆகும். வருடமொன்றில் 360 நாட்கள் உள்ளதெனக் கொள்க.

இக்கம்பனியின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான இருப்பு வைத்திருத்தல் காலம் மற்றும் சராசரி கடன்பட்டோர் :

	இருப்பு வைத்திருக்கும் காலம் (நாட்கள்)	சராசரி கடன்பட்டோர் (ரு)
(1)	30	53 333
(2)	30	125 000
(3)	30	300 000
(4)	72	53 333
(5)	72	300 000

(......)

24. கம்பனியொன்றின் கணக்கீட்டு விகிதம் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது **பிழையானது** ? (ஒவ்வொரு சூழ்நிலையையும் பாதிக்கும் ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படுவதாகக் கருதுக.)

(1) நடைமுறை வருடத்தில் வருமானவரி விகிதத்தில் அதிகரிப்பானது வட்டிக்காப்பு விகிதத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தாது.
(2) கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது கடன்பட்டோர் புரள்வு வீதத்தில் அதிகரிப்பானது நடைமுறை வருடத்தில் வினைத்திறனான கடன் சேகரிப்பு உபாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதைக் குறிக்கிறது.
(3) கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இருப்பு வைத்திருத்தல் காலத்தில் அதிகரிப்பானது நடைமுறை வருடத்தில் வினைத்திறனான சரக்கிருப்பு முகாமைத்துவக் கொள்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதைக் குறிக்கிறது.
(4) கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது காசு, காசுக்குச் சமமானவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது நடைமுறை வருடத்தில் திரவத்தன்மை வீதங்களில் அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது.
(5) கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இறுதிச் சரக்கிருப்பில் அதிகரிப்பானது நடைமுறை வருடத்தில் விரைவுச் சொத்துகள் விகிதத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தாது. (......)

25. முகாமைக் கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எவை **சரியானவை** ?

A - இது முகாமையின் விருப்பத்தின் பேரில் நடாத்தப்படுகிறது.
B - இது அனைத்து அக்கறையுள்ளோரின் தேவைகளில் கவனம் செலுத்துகிறது.
C - இது எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்குப் பயன்படுத்தப்படும்.
D - இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகிறது.

(1) A, B மாத்திரம் (2) A, C மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) A, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (......)

26. கம்பனியொன்று பொருளொன்றை உற்பத்திசெய்வதற்காக விசேட வகையான மூலப்பொருளொன்றைப் பயன்படுத்துகிறது. இதன் மறுகட்டளை தொகை 8 000 அலகுகளாகும். மூலப்பொருள் பாவனையும் விநியோகக் காலமும் பின்வருமாறு இருந்தது.

	அதிகூடியது	ஆகக் குறைந்தது
நாளாந்த பாவனை (அலகுகள்)	200	100
விநியோகக் காலம் (கிழமைகள்)	05	03

கம்பனியானது கிழமையிலுள்ள எல்லா ஏழு நாட்களும் வேலை செய்கிறது.

இக்கம்பனியினால் பராமரிக்கப்படும் ஆகக் குறைந்த, அதிகூடிய சரக்கிருப்பு மட்டங்கள் :

	ஆகக் குறைந்த சரக்கிருப்பு மட்டம் (அலகுகள்)	அதிகூடிய சரக்கிருப்பு மட்டம் (அலகுகள்)
(1)	2 800	10 800
(2)	2 800	12 900
(3)	3 800	12 900
(4)	6 000	10 800
(5)	6 000	12 900

(......)

[பக். 8 ஐப் பார்க்க

27. உற்பத்திக் கம்பனியொன்று இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் சேவைத் திணைக்களமொன்றையும் கொண்டுள்ளது. இத்திணைக்களங்கள் தொடர்பான பாதிடப்பட்ட மற்றும் உண்மையான தகவல்கள் பின்வருமாறு:

	உற்பத்தித் திணைக்களம்		சேவைத் திணைக்களம்
	இயந்திரம்	**ஒன்றிணைத்தல்**	**களஞ்சியம்**
பாதிடப்பட்ட உற்பத்தி மேந்தலைகள் (ரூ.)	420 000	320 000	180 000
பாதிடப்பட்ட நேர் மூலப்பொருள் கிரயம் (ரூ.)	500 000	400 000	–
பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள்	52 000	2 000	–
பாதிடப்பட்ட ஊழிய மணித்தியாலங்கள்	10 000	20 000	–
உண்மையான இயந்திர மணித்தியாலங்கள்	50 000	1 000	–
உண்மையான ஊழிய மணித்தியாலங்கள்	13 000	16 000	–

சேவைத் திணைக்களத்தின் மேந்தலைக் கிரயமானது நேர் மூலப்பொருள் கிரயங்களின் அடிப்படையில் உற்பத்தித் திணைக்களங்களுக்கிடையே மீளப் பகிரப்படுகிறது.

இயந்திரத் திணைக்களம் மற்றும் ஒன்றிணைத்தல் திணைக்களத்திற்கான மிகவும் பொருத்தமான மேந்தலை உட்கொள்ளல் வீதங்கள் :

	இயந்திரத் திணைக்களம்	**ஒன்றிணைத்தல் திணைக்களம்**
(1)	இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 10	ஊழிய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 20
(2)	இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 10	இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 200
(3)	இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 10	ஊழிய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 25
(4)	ஊழிய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 40	ஊழிய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 25
(5)	ஊழிய மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 52	இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ. 200

(……)

● **28, 29 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

கம்பனியொன்றானது தனிப்பொருளொன்றை உற்பத்திசெய்து அதன் அலகொன்றை ரூ. 50 இற்கு விற்பனை செய்கிறது. பின்வரும் தகவல்கள், இரண்டு செயற்பாட்டு மட்டங்களுடன் தொடர்பானவை.

உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை	**அலகொன்றிற்கான கிரயம் (ரூ)**
2 000	50
3 000	40

28. மொத்த நிலையான கிரயம் மற்றும் அலகொன்றிற்கான மாறும் கிரயம் ஆகியன முறையே:

(1) ரூ. 20 000, ரூ. 10
(2) ரூ. 20 000, ரூ. 20
(3) ரூ. 40 000, ரூ. 30
(4) ரூ. 60 000, ரூ. 10
(5) ரூ. 60 000, ரூ. 20 (……)

29. சமப்பாட்டு புள்ளி (அலகுகளில்) மற்றும் விற்பனைக்குப் பங்களிப்பு விகிதம் முறையே:

(1) 500, 0.4 ஆகும்.
(2) 667, 0.4 ஆகும்.
(3) 1 000, 0.8 ஆகும்.
(4) 1 500, 0.6 ஆகும்.
(5) 2 000, 0.6 ஆகும். (……)

30. மூலதன முதலீட்டுச் செயற்றிட்டங்களை மதிப்பிடுவது தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/ சரியானவை**?

A - திரும்பச் செலுத்தும் கால முறையானது பணத்தின் காலப் பெறுமதியைக் கருத்திற் கொள்வதில்லை.

B - தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையானது செயற்றிட்டக் காலம் முழுவதும் பெறப்படும் காசுப் பாய்ச்சல்களைக் கருத்திற் கொள்கின்றது.

C - கணக்கீட்டுத் திரும்பல் விகிதமானது செயற்றிட்ட காலம் முழுவதிற்குமான வருமானம் மற்றும் செலவினங்களைக் கருத்திற் கொள்கிறது.

(1) A மாத்திரம்
(2) B மாத்திரம்
(3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம்
(5) A, B, C ஆகியன எல்லாம் (……)

……… × ……… = ……… **புள்ளிகள்**

[பக். 9 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

● **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

31. வியாபாரமொன்றின் பின்வரும் அக்கறையுடையோரில் எத்தகையோர் கீழே தரப்பட்டுள்ள தகவலில் **அதிகூடிய** அக்கறையுடையவர்களாக இருப்பர் ?

(1) அரசாங்கம் (2) முதலீட்டாளர்கள் (3) கடனை வழங்குவோர் (4) முகாமையாளர்கள்

தகவல்	**அக்கறையுடையோர் (இலக்கத்தைக் குறிப்பிடுக.)**
A - நீண்ட தவணைக் கடன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தின் இயலுமை	:......................
B - முதலிட்ட மூலதனத்துடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் இலாபத்தன்மை	:......................
C - நிறுவனமொன்றினால் உற்பத்திசெய்யப்படும் பொருளுக்கான கிரயம்	:......................
D - நிறுவனமொன்று செலுத்தும் வரியின் அளவு	:......................

● **32, 33, 34 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஜெராட் PLC இல் 2018 மார்ச் மாதத்தில் இடம்பெற்றுள்ளன. இக்கம்பனியின் கணக்கீட்டு வருடமானது 31 மார்ச் மாதத்தில் முடிவடைகின்றது.

(1) சாதாரண பங்குகள் விநியோகத்தினால் ரூ. 500 000 காசு பெறப்பட்டது.
(2) ரூ. 1 000 000 சரக்குகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
(3) காணியானது முதல் தடவையாக மறு மதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூ. 300 000 பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
(4) ரூ. 60 000 விளம்பரச் செலவுகள் ஏற்பட்டுள்ளதுடன் அவை மே மாதம் 2018 இல் செலுத்தக்கூடியனவாகும்.

32. பின்வரும் கூற்றுகளில் எக்கூற்று மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினைக் குறிக்கின்றது ?

விளைவு	**கொடுக்கல் வாங்கல் (இலக்கத்தைக் குறிப்பிடுக.)**
A - சொத்துகளில் குறைவும் உரிமையாண்மையில் குறைவும்	:..........................
B - பொறுப்புகளில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் குறைவும்	:..........................
C - சொத்துகளில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் அதிகரிப்பும்	:..........................
D - சொத்துகளில் அதிகரிப்பும் பொறுப்புகளில் அதிகரிப்பும்	:..........................

33. மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பதியப் பயன்படுத்தப்படும் மூலப் பதிவேடுகளைக் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	**மூலப் பதிவேடு**
(1)	....
(2)	....
(3)	....
(4)	....

34. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பொதுப் பேரேட்டில் எந்தக் கணக்கு வகையின் கீழ் பதியப்படும் என்பதனை '$\sqrt{}$' குறியீட்டின் மூலம் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்			**கணக்கின் வகை**		
	சொத்து	**பொறுப்பு**	**உரிமையாண்மை**	**வருமானம்**	**செலவுகள்**
(1)	....	....	....	....	....
(2)	....	....	....	....	....
(3)	....	....	....	....	....
(4)	....	....	....	....	....

[பக். 10 ஐப் பார்க்க

● **35, 36 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் அமலன் PLC இன் 01.04.2017 ஆம் திகதியுடன் தொடர்பானவை ஆகும்.

	ரூ.' 000
வியாபார வருமதிகள்	900
ஐயக்கடனுக்கான ஒதுக்கீடு	90

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இந்நிறுவனத்தின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளன.

	ரூ.' 000
கடன் விற்பனைகள்	3 600
விற்பனைத் திரும்பல்கள்	400
வியாபார வருமதிகளுக்காகப் பெற்ற காசு	2 800
பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன்	200

நிறுவனமானது வருட முடிவிலுள்ள வியாபார வருமதியாளர்களின் மீதியில் 10% இனை ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்கிறது.

35. 31.03.2018 இல் உள்ளவாறான பின்வருவன:

(அ) வியாபார வருமதியாளர்கள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி (ரூ.' 000) …………………

(ஆ) அறிக்கையிடப்பட்ட வியாபார வருமதியாளர்களின் கொண்டுசெல் தொகை (ரூ.' 000) …………………

36. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான அறவிடமுடியாக் கடன், ஐயக்கடன் ஆகியவற்றைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

	விபரம்	**வரவு (ரூ.' 000)**	**செலவு (ரூ.' 000)**
(அ)	……………………………………………	…………………	
	……………………………………………		…………………
	(அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படுதல்)		
(ஆ)	……………………………………………	…………………	
	……………………………………………		…………………
	(ஐயக்கடனாகப் பதியப்படுதல்)		

37. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இளங்கோவின் உணவு விநியோக வணிகத்தில் இடம்பெற்றுள்ளன.

* 15.01.2018 - உணவு விநியோகிப்பதற்கான கட்டளை ஒன்றைப் பெற்றுக்கொண்டதுடன் முற்பணமாக ரூ. 100 000 காசு பெறப்பட்டது.
* 28.01.2018 - மேற்படி கட்டளைக்கான உணவுகளை விநியோகித்துள்ளதுடன் காசாக ரூ. 200 000 பெறப்பட்டது.
* 05.02.2018 - இக்கட்டளைக்கான மீதிப் பணம் ரூ. 50 000 பெறப்பட்டது.

மேற்படி கட்டளையின் வருமானத்தை இனம்காணுதல் தொடர்பான,

(அ) வருமானத்தை இனம்காணும் திகதி :……………………………………………

(ஆ) இத்திகதியில் இனம்காணப்பட வேண்டிய வருமானம் : ரூ. ……………………………………

(இ) மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கரு : ……………………………………………

38. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்களைச் சீராக்கம் செய்வதனால் அவை இலாபத்தில் **அதிகரிப்பினையா (I)** அல்லது **குறைவினையா (D)** அல்லது **மாற்றங்களை ஏற்படுத்தாதா (NC)** என்பதைக் குறிப்பிடுக. (இவ்விடயங்கள் புத்தகங்களில் இன்னமும் சீராக்கப்படவில்லை.)

	இலாபத்தில் தாக்கம் (I, D, NC எனக் குறிப்பிடுக.)
A - சென்மதி மின்சாரம்	:………………………………
B - வருமதி வட்டி வருமானம்	:………………………………
C - கடன்கொடுத்தோரிடம் பெற்ற கழிவுகள்	:………………………………
D - முதற்தடவையாக நிலம் மீள்மதிப்பின்போது ஏற்பட்ட மிகை	:………………………………

[பக். 11 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

39. ரங்கன் விளையாட்டுக் கழகம் 100 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அங்கத்தவர் ஒருவரின் வருடாந்த சந்தா ரூ. 2 400 ஆகும். பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

விபரம்	31.03.2018 இலுள்ளபடி (ரூ.)	31.03.2017 இலுள்ளபடி (ரூ.)
முற்பணமாகப் பெற்ற சந்தா	24 000	12 000
நிலுவையாகவுள்ள சந்தா	36 000	48 000

இவ்விளையாட்டுக் கழகத்தின் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) 31.03.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான இனங்காணப்பட்ட சந்தா வருமானம்

ரூ. :..........................

(ஆ) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தில் பெற்ற மொத்த சந்தா ரூ. :..........................

40. பின்வரும் தகவல்கள் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தின் அனுர, விமலன் பங்குடைமையின் இலாப நட்டப் பகிர் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

	ரூ.	ரூ.
மூலதன வட்டி 5% :		
அனுர	5 000	
விமலன்	20 000	25 000
இலாபப் பங்கு :		
அனுர	20 000	
விமலன்	10 000	30 000

இக்கணக்கானது பயிலுனரான கணக்கீட்டு எழுதுவினைஞரால் பங்குடைமை ஒப்பந்தத்தைக் கருத்திற் கொள்ளாது தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், இத்தொகையானது பங்காளரின் நடைமுறைக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. பங்குடைமை ஒப்பந்தத்தின்படி இலாப நட்டமானது அனுர, விமலன் ஆகியோருக்கிடையில் முறையே 3:2 என்ற விகிதத்தில் பகிரப்படல் வேண்டும். ஒப்பந்தத்தில் மூலதனத்திற்கு வட்டி செலுத்துவதற்கான எதுவித ஏற்பாடுகளும் இல்லை.

பங்காளர்களின் நடைமுறைக் கணக்கு மீதிகளைச் சரி செய்வதற்கான நாட்குறிப்புப் பதிவினை எழுதுக.

விபரம்	வரவு (ரூ.)	செலவு (ரூ.)
....	....	
....		....

41. சாந்தன், ஆசிக் ஆகியோர் வியாபாரமொன்றின் பங்காளர்கள் ஆவர். இவர்கள் இலாப நட்டங்களை முறையே 3:2 என்ற விகிதத்தில் பகிர்கின்றனர். 01.04.2017 இல் தயாளன் பங்காளராக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இத்தினத்தில் சாந்தன், ஆசிக் ஆகியோரின் மூலதன மீதிகள் முறையே ரூ. 1 000 000, ரூ. 750 000 ஆக இருந்தது. புதிய இலாப நட்ட விகிதமானது சாந்தன், ஆசிக், தயாளன் ஆகியோருக்கிடையில் முறையே 2:2:1 ஆகும். இத்தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ. 3 000 000 என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நன்மதிப்புக் கணக்கினைப் பராமரிக்காது நன்மதிப்பினை பங்காளர் மூலதனக் கணக்கினூடகச் சீராக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நன்மதிப்பு சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் சாந்தன், ஆசிக் ஆகியோரின் மூலதனக் கணக்கு மீதிகளைக் குறிப்பிடுக.

(அ) சாந்தன் ரூ. .... (ஆ) ஆசிக் ரூ. ....

42. இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின்படி பின்வரும் கூற்றுகள் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

	கூற்று	T/F
A -	ஏற்பாடுகளானவை நிச்சயமற்ற காலம் மற்றும் தொகையுடன் கூடிய சாத்தியமான கடப்பாடுகளாகும்.	:....................
B -	நிகழத்தக்க பொறுப்புக்களானவை நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.	:....................
C -	கிரயம், தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவோ அதில் வருட இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுகிறது.	:....................
D -	கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களானவை கடந்த காலங்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் கணக்கு வைக்கப்படும்.	:....................

[பக். 12 ஐப் பார்க்க

43. பின்வரும் விடயங்கள் LKAS 1 (நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பித்தல்) இன்படி நிதிக் கூற்றுகளின் எந்தக் கூறுகளில் சமர்ப்பிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடுக.

விடயம்	நிதிக் கூற்றுகளின் கூறு
A - விற்பனைக் கிரயம்	....
B - நிறுத்தி வைத்த வருவாய்	....
C - செலுத்திய வருமானவரி	....
D - வியாபார கொடுக்குமதிகள்	....

44. LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்தான காசு வெளிப் பாய்ச்சல்களாக அறிக்கையிடப்படும் **இரண்டு** விடயங்கள் வீதம் குறிப்பிடுக.

வகை	விடயம்
(அ) முதலீட்டு நடவடிக்கை	1. ....
	2. ....
(ஆ) நிதியீட்ட நடவடிக்கை	1. ....
	2. ....

45. சில்லறை வியாபாரமொன்றின் சரக்குப் புரள்வு விகிதம் மற்றும் நடைமுறை விகிதம் என்பன முறையே 10 தடவைகள் மற்றும் 2 : 1 ஆகும். எனினும், பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள், புத்தகங்களிலிருந்து விடுபட்டுள்ளதாக பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கொடுக்கல் வாங்கல்களைக் கருத்திற் கொள்ளும்போது சரக்கிருப்பு திரும்பல் விகிதம் மற்றும் நடைமுறை விகிதமானது **அதிகரிக்குமா (I)**, **குறையுமா (D)**, **மாற்றமில்லையா (NC)** என்பதனைக் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	சரக்குப் புரள்வு விகிதம் (I/D/NC)	நடைமுறை விகிதம் (I/D/NC)
(அ) ரூ. 500 000 கிரயமான பொருட்கள் ரூ. 800 000 இற்குக் கடனுக்கு விற்பனை	....	....
(ஆ) ரூ. 250 000 கிரயமான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு	....	....

46. ஆனந்தன் PLC இன் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

	ரூ.'000
மொத்த இலாபம்	4 800
விற்பனைக் கிரயம்	7 200
ஏனைய வருமானம்	1 500
செயற்பாட்டு மற்றும் நிதிச் செலவுகள்	4 500
ஏனைய முற்றுமடங்கிய வருமானம்	1 500

கம்பனியின் வருமானவரி வீதமானது வரிக்கு முந்திய இலாபத்தில் 20% ஆகும்.

இக்கம்பனியின் 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் விகிதங்களைக் குறிப்பிடுக.

(அ) மொத்த இலாப விகிதம் (%) :...........................

(ஆ) தேறிய இலாப விகிதம் (%) :...........................

[பக். 13 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

47. கம்பனியொன்று ஒரு வகையான விளையாட்டுப் பொருளை உற்பத்திசெய்யத் திட்டமிடுகின்றது. இப்பொருளுடன் தொடர்பான குறிப்பிட்டவொரு காலத்திற்கான பாதீட்டுத் தரவுகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

அலகொன்றுக்கான நேர் மூலப்பொருள் கிரயம்		ரூ. 2 300
அலகொன்றுக்கான நேர் ஊழியக் கிரயம்		ரூ. 1 000
அலகொன்றுக்கான மொத்த நேரக் கிரயம்		ரூ. 3 300
நேர் ஊழிய வீதம்	மணித்தியாலமொன்றுக்கு	ரூ. 200
உற்பத்தி மேந்தலை உறிஞ்சல் வீதம்	நேர் ஊழிய மணித்தியாலமொன்றுக்கு	ரூ. 300
உற்பத்தியல்லா மேந்தலைகள்	மொத்தக் கிரயத்தின்	20%

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) அலகொன்றிற்கான பாதிடப்பட்ட உற்பத்தி மேந்தலை ரூ. :...........................

(ஆ) அலகொன்றிற்கான பாதிடப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூ. :...........................

(இ) அலகொன்றிற்கான பாதிடப்பட்ட மொத்த மேந்தலை ரூ. :...........................

48. கம்பனியொன்று 'பீசா' எனும் தனிப்பொருளை உற்பத்தி செய்கிறது. பின்வரும் தகவல்கள் அதன் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருளொன்றுடன் தொடர்பானவையாகும்.

மூலப்பொருளின் வருடாந்த நுகர்வு		- 10 000 அலகுகள்
கட்டளைக் கிரயம்	கட்டளையொன்றுக்கு	- ரூ. 400
இருப்பு வைத்திருக்கும் கிரயம்	அலகொன்றுக்கு	- ரூ. 200

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) இம்மூலப்பொருளின் சிக்கன கட்டளைத் தொகை (EOQ) ....

(ஆ) சிக்கன கட்டளைத் தொகையின் அடிப்படையில் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய கட்டளைகளின் எண்ணிக்கை ....

49. கம்பனியொன்று தனிப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்து அதனை அலகொன்று ரூ. 60 விலையில் விற்பனை செய்கிறது. இக்கம்பனியானது 16 000 அலகுகளை விற்பனை செய்யுமாயின், அலகொன்றிற்கான நட்டம் ரூ. 10 ஆகும். 40 000 அலகுகள் விற்பனை செய்யுமாயின், அலகொன்றிற்கான இலாபம் ரூ. 8 ஆகும். பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) மொத்த நிலையான கிரயம் ரூ. :...........................

(ஆ) அலகொன்றிற்கான பங்களிப்பு ரூ. :...........................

(இ) சமப்பாட்டுப் புள்ளி அலகுகள் :...........................

50. கம்பனியொன்று தனது ஊழிய வினைத்திறனை அதிகரிப்பதற்குத் தொழிற்சாலையைக் குளிரூட்டத் தீர்மானித்துள்ளது. குளிரூட்டியின் கிரயமானது ரூ. 1 500 000 ஆகும். இதன் பயன்தருகாலம் 5 வருடங்களாக இருப்பதுடன் எஞ்சிய பெறுமதி எதுவுமில்லை. ஊழிய வினைத்திறனை அதிகரிப்பதன் காரணமாக வருடாந்த வருமானமானது ரூ. 600 000 இனால் அதிகரிக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் குளிரூட்டிக்கான மேலதிக பராமரிப்புச் செலவாக ரூ. 240 000 வருடாந்தம் ஏற்படும். கம்பனியானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடுகிறது.

பிரேரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) முதல் வருடத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் ரூ. :...........................

(ஆ) எதிர்பார்க்கப்படும் வருடாந்த தேறிய இலாபம் ரூ. :...........................

புள்ளிகள்

* * *

WWW.PASTPAPERS.WIKI

13002

AL/2018/33/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

27.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

* **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஆறு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்குமான விடையானது **புதிய தாளில்** ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
* உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

1. ஆர்வின் PLC ஆனது சில்லறை வியாபாரமொன்றில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தின் 31.03.2018 இல் உள்ளவாறான பரீட்சை மீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

விபரம்	வரவு (ரூ. '000)	செலவு (ரூ. '000)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டு செல் மீதி	65 500	
கொள்வனவுகள்	41 850	
வியாபார வருமதிகள்	22 600	
01.04.2017 இல் சரக்கிருப்பு	9 750	
காசும் காசுக்குச் சமமானவைகளும்	1 250	
நிர்வாகச் செலவுகள்	7 100	
விநியோகக் கிரயங்கள்	9 850	
செலுத்திய வருமான வரி	1 100	
விற்பனைகள்		83 000
வியாபாரக் கொடுக்குமதிகள்		12 500
01.04.2017 இல் உத்தரவாதத்திற்கான ஏற்பாடு		670
கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள்		35 000
01.04.2017 இல் நிலத்தின் மீதான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		5 000
01.04.2017 இல் நிறுத்திவைத்த வருவாய்கள்		6 880
சென்மதி நிர்வாகச் செலவுகள்		250
வங்கிக் கடன்		12 000
01.04.2017 இல் வருமான வரிக்கான ஏற்பாடு (31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கானது)		450
தரகு வருமானம்		3 250
	159 000	**159 000**

[பக் 2 ஐப் பார்க்க

மேலதிக தகவல்கள் :

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) சரக்கிருப்பானது மூன்று வகைகளைக் கொண்டுள்ளதுடன், 31.03.2018 இல் அவற்றின் கிரயங்களும் தேறிய தேறக்கூடிய பெறுமதிகளும் பின்வருமாறு இருந்தது.

வகை	**கிரயம் (ரூபா '000)**	**தே. தே. பெ. (ரூபா '000)**
பால்	4 200	4 400
அரிசி	2 500	2 100
சீனி	3 800	3 900
மொத்தம்	**10 500**	**10 400**

(ii) நடைமுறை வருடத்திற்கான நிர்வாகச் செலவுகள், பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளன.

விடயம்	**ரூ.'000**
செலுத்திய சம்பளம்	2 700
ஊழியர் நம்பிக்கை நிதி (ETF)	90
இயக்குனர் கட்டணங்கள்	1 500
கணக்காய்வுக் கட்டணங்கள்	610
பெறுமானத்தேய்வுச் செலவுகள்	2 200
மொத்தம்	**7 100**

(iii) நிர்வாகச் செலவுகளுக்குள் உள்ளடங்கியுள்ள சம்பளமானது ஊழியர்களுக்குச் செலுத்திய தேறிய சம்பளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தேறிய சம்பளமானது ஊழியர் சேமலாப நிதிக்கான (ஊ. சே. நி.) ஊழியர்களின் பங்களிப்பினைக் கழித்து கணிக்கப்பட்டுள்ளது. ஊ. சே. நிதிக்கான தொழில்கொள்வோர் மற்றும் ஊழியர்களது பங்களிப்பானது முறையே 15% மற்றும் 10% ஆகும். எனினும், நடைமுறை வருடத்திற்கான தொழில்கொள்வோர், ஊழியர்களின் ஊ. சே. நிதிக்கான பங்களிப்பானது இலங்கை மத்திய வங்கிக்கு இன்னமும் செலுத்தப்படாதுள்ளதுடன் கணக்குப் புத்தகங்களிலும் பதியப்படவில்லை.

(iv) 31.03.2018 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கமும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வுகளும் பின்வருமாறு இருந்தது.

விபரம்	**கிரயத்தில் வருடாந்த பெறுமானத்தேய்வு வீதம்**	**கிரயம்/மீள் மதிப்பீட்டுத் தொகை (ரூ. '000)**	**திரண்ட பெறுமானத்தேய்வு (ரூ. '000)**	**கொண்டு செல் தொகை (ரூ. '000)**
நிலம்	–	25 500	–	25 500
கட்டடங்கள்	5%	28 000	8 000	20 000
மோட்டார் வாகனங்கள்	20%	16 500	4 500	12 000
காரியாலய உபகரணங்கள்	10%	10 000	2 000	8 000
மொத்தம்		**80 000**	**14 500**	**65 500**

(v) மோட்டார் வாகனங்கள், பொருள்களை விநியோகிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதுடன் ஏனைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நிர்வாக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பெறுமானத்தேய்விடக்கூடிய அனைத்து சொத்துக்களும் நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகின்றன. நடைமுறை வருடத்திற்கான பெறுமானத்தேய்வானது செய்யப்பட்டுள்ளது.

(vi) வியாபாரத்தின் நிலமானது 31.03.2015 இல் முதற் தடவையாக ரூ. 25 500 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலமானது 31.03.2018 இல் இரண்டாம் தடவையாக ரூ. 19 500 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், அது இதுவரை கணக்கிலிடப்படவில்லை.

(vii) ரூ. 4 000 000 கிரயமான புதிய கட்டட நிர்மாணப் பணிகள் 31.03.2018 இல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் புதிய கட்டடம் தொடர்பான சீராக்கங்கள் புத்தகங்களில் சரியாகக் கணக்கிலிடப்பட்டுள்ளன.

[பக் 3 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

(viii) ரூ. 2 500 000 கிரயமான மோட்டார் வாகனமொன்று 31.03.2018 இல் ரூ. 1 500 000 இற்கு அகற்றப்பட்டுள்ளது. இந்த மோட்டார் வாகனமானது 01.10.2016 இல் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த அகற்றலானது முறையாக கணக்கிலிடப்பட்டுள்ளதுடன் மோட்டார் வாகன அகற்றல் நட்டமானது விநியோகக் கிரயத்தின் கீழ் பதியப்பட்டுள்ளது.

(ix) இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுடன் வேறு எதுவிதச் சேர்ப்புகளோ அல்லது அகற்றல்களோ இடம்பெறவில்லை.

(x) இக்கம்பனியானது பொருள்களை ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கிறது. கம்பனியானது முன்னைய வருடத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக நடைமுறை வருடத்தில் உத்தரவாதச் செலவுகளாக ரூ. 450 000 இனைச் செலுத்தியுள்ளது. இது நடைமுறை வருடத்துக்கான விநியோகக் கிரயத்துள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.03.2018 இல் உள்ளவாறான உத்தரவாதத்திற்கான ஏற்பாடானது ரூ. 750 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(xi) 31.03.2018 இல் பெறப்பட்ட வங்கிக் கடனானது 31.03.2019 இல் இருந்து தொடங்கி ஒவ்வொன்றும் ரூ. 3 580 000 ஆன 5 வருடாந்த தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்படல் வேண்டும். இக்கடனின் வட்டி வீதமானது வருடாந்தம் 15% ஆகும்.

(xii) செலுத்திய வருமான வரியானது முன்னைய வருடத்திற்காகச் செலுத்திய ரூ. 350 000 இனையும் நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ளது. நடைமுறை வருடத்தின் இறுதிக் காலாண்டிற்கான வருமான வரி பொறுப்பானது ரூ. 400 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இது நிதிக் கூற்றுகளில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது :

LKAS 1 (நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான ஆர்வின் PLC இன் பின்வரும் நிதிக் கூற்றுகள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று

(3) 31.03.2018 இலுள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று **(மொத்தம் 20 புள்ளிகள்)**

2. (அ) அமலன், விமலன், கமலன் ஆகியோரின் பங்குடைமை, உற்பத்தி வியாபாரமொன்றில் ஈடுபடுகிறது. பின்வரும் தகவல்கள் 31.03.2017 இலுள்ளவாறான அதன் நிதிநிலைமைக்கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

	ரூ.'000
சரக்கிருப்பு:	
மூலப் பொருட்கள்	600
நடைமுறை வேலை (உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.)	800
முடிவுப் பொருட்கள்	1 200
மூலதனக் கணக்குகள்:	
அமலன்	10 000
விமலன்	6 000
கமலன்	4 000
நடைமுறைக் கணக்குகள் :	
அமலன்	1 200
விமலன்	1 000
கமலன்	600
கடன் கணக்கு - அமலன்	4 000

மேலதிக தகவல்கள் :

(i) பங்குடைமை ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு இருந்தன:

- அமலன், விமலன், கமலன் ஆகியோர் முறையே 5 : 3 : 2 என்னும் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்துகொள்வர்.
- பங்காளர்கள் ஆரம்ப மூலதன மீதிகளில் 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்கள்.
- பங்காளர்கள் தாம் கொடுத்த கடனிற்காக 12% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்கள்.

[பக் 4 ஐப் பார்க்க

(ii) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

	ரூ.'000
மூலப்பொருட்கள் கொள்வனவுகள்	1 400
நேர் கூலிகள்	700
நிர்வாக, விநியோகச் செலவுகள்	2 350
நிதிச் செலவுகள்	350
விற்பனைகள்	9 700
உற்பத்தி மேந்தலைகள்	300

(iii) 31.03.2018 இலுள்ளவாறான சரக்கிருப்புக்கள் :

	ரூ.'000
மூலப்பொருட்கள்	1 000
நடைமுறை வேலை (உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	600
முடிவுப் பொருட்கள்	1 500

(iv) அமலனின் கடனிற்கான வட்டியானது இதுவரை செலுத்தப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பான எந்தப் பதிவும் புத்தகங்களில் செய்யப்படவில்லை.

(v) தொழிற்சாலையின் முகாமையாளராகப் பணியாற்றுகின்றமைக்காக கமலனுக்கு மாதாந்த சம்பளமாக ரூ. 10 000 செலுத்தப்படுகிறது. கமலனுக்கு 10 மாதங்களுக்காகச் செலுத்தப்பட்ட சம்பளமானது உற்பத்தி மேந்தலைகளில் உள்ளடங்கியுள்ளது. மிகுதி மாதங்களுக்கான சம்பளமானது செலுத்தப்படவோ, கணக்கிலிடப்படவோ இல்லை.

(vi) நடைமுறை வருடத்திற்கான பெறுமானத்தேய்வானது ரூ. 1 400 000 ஆக இருப்பதுடன் இது நிர்வாக, விநியோகச் செலவுகளுக்குள் கணக்கிலிடப்பட்டுள்ளது. இத்தொகையானது தொழிற்சாலைக்கும் நிர்வாகக் காரியாலயத்துக்குமிடையே சமமாகப் பகிரப்படல் வேண்டும்.

(vii) விமலன் தனது சுகயீனம் காரணமாக 31.03.2018 இல் பங்குடைமையிலிருந்து இளைப்பாறினார். இத்திகதியில் அவரின் நன்மதிப்பின் பங்கானது ரூ. 2 100 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பட்டுள்ளது. அவருக்குச் செலுத்தவேண்டிய தொகையில் ரூ. 3 000 000 ஆனது இளைப்பாறும் நேரத்தில் மருத்துவச் சிகிச்சைகளுக்காகச் செலுத்தப்பட்டுள்ளது. மிகுதித் தொகையானது கடன் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது. அமலன், கமலன் ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 5:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து பங்குடைமையைத் தொடர்வதெனத் தீர்மானித்துள்ளனர்.

வேண்டப்படுவது:

(1) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான அமலன், விமலன், கமலன் பங்குடைமையின் வருமானக்கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)

(2) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குகள்

(3) விமலனின் கடன் கணக்கு **(10 புள்ளிகள்)**

/ பக் 5 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

(ஆ) பழப்பானங்களைத் தயாரிக்கும் கம்பனியொன்று இரண்டு வகையான பழப்பானங்களை (மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழம்) உற்பத்தி செய்கிறது. இக்கம்பனி **செயன்முறை** மற்றும் **போத்தலிலடைத்தல்** ஆகிய இரண்டு உற்பத்திப் பிரிவுகளைக் கொண்ட தொழிற்சாலையையும் சேவைப் பிரிவான **களஞ்சியசாலையையும்** கொண்டுள்ளது. தொழிற்சாலையும் களஞ்சியசாலையும் வெவ்வேறு கட்டடங்களில் அமையப்பெற்றுள்ளன.

ஒரு வருட காலத்திற்காக 50 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் பாதிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு :

விபரம்	**தொழிற்சாலை (ரூ.)**	**களஞ்சியம் (ரூ.)**	**மொத்தம் (ரூ.)**
வாடகை	180 000	50 000	230 000
நேரில் கூலி	?	?	400 000
மின்சாரக் கட்டணங்கள்	120 000	30 000	150 000
இயந்திர காப்புறுதி	90 000	20 000	110 000
கட்டடங்களுக்கான இறை வரிகள்	90 000	30 000	120 000
பாதுகாப்புச் சேவைக்கான கட்டணங்கள்	?	?	360 000

விபரம்	**செயன்முறை**	**போத்தலிலிடல்**	**களஞ்சியம்**
நேரில் ஊழியர்களின் எண்ணிக்கை	10	15	15
தளப் பரப்பு (சதுர மீற்றர்)	12 000	18 000	8 000
உற்பத்தி இயந்திரத்தின் கிரயம் (ரூ.)	400 000	200 000	–
குளிரூட்டல் இயந்திரத்தின் கிரயம் (ரூ.)	–	–	250 000
காலப்பகுதிக்கான இயந்திர மணித்தியாலங்கள்	100 000	65 000	–
பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கை	2	2	8
காலப்பகுதிக்கான மொத்த கிலோவற் மணித்தியாலங்கள்	3 000	2 000	1 000

மேலதிக தகவல்கள் :

(i) உற்பத்தி இயந்திரமும் குளிரூட்டல் இயந்திரமும் வருடாந்தம் முறையே 10%, 8% நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படுகிறது.

(ii) களஞ்சியத்தின் மொத்த மேந்தலைகளானவை, **செயன்முறை** மற்றும் **போத்தலிலடைத்தல்** ஆகிய பிரிவுகளுக்கிடையே உற்பத்தி இயந்திரத்தின் கிரயத்தின் அடிப்படையில் மீள் பகிர்வு செய்யப்படுகிறது.

(iii) உற்பத்திப் பகுதிகளின் மேந்தலைகள், இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் உறிஞ்சப்படுகிறது.

(iv) பின்வரும் தகவல்கள், மாம்பழ குடிபான போத்தல் ஒன்று தொடர்பானவையாகும்.

விபரம்		**போத்தல் ஒன்றிற்கு**
செலவிட்ட உண்மையான நேரம்:	செயன்முறைப்பிரிவு	12 நிமிடங்கள்
	போத்தலிலடைத்தல் பிரிவு	6 நிமிடங்கள்
நேர்க் கிரயங்கள்:	மூலப்பொருட்கள்	ரூ. 6.40
	ஊழியம்	ரூ. 5.00
உற்பத்தியல்லா மாறும் மேந்தலைகள்		ரூ. 4.00

(v) உற்பத்தியல்லா நிலையான மேந்தலைகள் ரூ. 300 000 ஆகும்.

(vi) இலாப எல்லை ஒவ்வொரு உற்பத்திப்பொருள்களினதும் விற்பனை விலையில் 20% ஆகும்.

வேண்டப்படுவது:

(1) பகிர்வு அடிப்படையைத் தெளிவாகக் காட்டக்கூடியதான மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை (சேவைப் பிரிவின் மேந்தலைகளின் மீள் பகிர்வு உட்பட)

(2) செயன்முறைப் பிரிவு, போத்தலிலடைத்தல் பிரிவு ஆகிய இரண்டினதும் மேந்தலை உறிஞ்சுதல் வீதங்கள்

(3) மாம்பழ குடிபான போத்தலொன்றின் உற்பத்திக் கிரயம்

(4) மாம்பழ குடிபான போத்தலொன்றின் பாதிடப்பட்ட விற்பனை விலை **(10 புள்ளிகள்)**

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக் 6 ஐப் பார்க்க

3. சமந்தா என்பவர் 01.01.2018 இல் காகிதாதிகள் வியாபாரமொன்றை ஆரம்பித்துள்ளார். வியாபாரத்தின் அனைத்து காசு கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறைக்கணக்கினூடாகச் செய்யப்படுகின்றன. சமந்தா, வியாபாரத்தின் முகாமையாளராகப் பணியாற்றுவதுடன் விற்பனையை மேற்கொள்வதற்கும் இருப்புக்களைப் பராமரிப்பதற்கும் ஊழியரொருவரை நியமித்துள்ளார்.

ஜனவரி 2018 இல் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.

இல.	திகதி	காசோலை இல.	கொடுக்கல் வாங்கல்
1	01/01		சமந்தா ரூ. 600 000 ஐக் காசாக முதலிட்டுள்ளதுடன் ரூ. 180 000 பெறுமதியான தளபாடங்களையும் கொண்டு வந்துள்ளார்.
2	03/01	5001	ரூ. 300 000 காகிதாதிகள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
3	07/01	4450	ரூ. 100 000 கிரயமான காகிதாதிகள் ரூ.150 000 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.
4	10/01		ரூ. 150 000 கிரயமான காகிதாதிகள் காமினிக்கு ரூ. 200 000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
5	12/01		ரூ. 400 000 காகிதாதிகள் ஜெயந்தன் PLC இடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
6	12/01		ரூ. 300 000 கிரயமான காகிதாதிகள் நிர்மலனுக்கு ரூ. 280 000 இற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
7	15/01	6005	காமினியிடமிருந்து வரவேண்டிய மொத்தத் தொகை பெறப்பட்டது.
8	18/01	2005	ரூ. 150 000 கிரயமான காகிதாதிகள் ரூ. 120 000 காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.
9	25/01	5002 5003	செலுத்திய சம்பளங்கள்: சமந்தா ரூ. 50 000 உதவியாளர் ரூ. 25 000
10	26/01	5004	குறிப்பிட்ட மாதத்திற்காக ஏற்பட்ட காரியாலயச் செலவுகளான ரூ. 40 000 இல் ரூ. 30 000 செலுத்தப்பட்டது.
11	29/01	3010	நிர்மலனிடமிருந்து வரவேண்டிய மொத்த தொகையானது ரூ. 10 000 கழிவாக அனுமதித்து பெறப்பட்டது.
12	30/01	5005	ஜெயந்தன் PLC இற்குச் செலுத்த வேண்டிய தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

ஜனவரி மாதத்திற்காக 03.02.2018 இல் பெறப்பட்ட வணிகத்தின் வங்கிக் கூற்றானது பின்வருமாறு:

சமந்தா வியாபாரம் கணக்கு இலக்கம் : 5063 - 7000 - 8002				
திகதி	**விபரம்**	**வரவு (ரூ.)**	**செலவு (ரூ.)**	**மீதி (ரூ.)**
01/01	காசு வைப்பு		600 000	600 000
03/01	காசோலை இல. 5001	300 000		300 000
07/01	காசோலை இல. 4450		150 000	450 000
15/01	காசோலை இல. 6005		200 000	650 000
18/01	காசோலை இல. 2005		120 000	770 000
25/01	காசோலை இல. 5002	50 000		
	காசோலை இல. 5003	25 000		695 000
26/01	காசோலை இல. 5004	30 000		
	வங்கிக் கட்டணங்கள்	5 000		660 000
31/01	மீதி			660 000

[பக் 7 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

வேண்டப்படுவது :

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 12 வரைக்குமான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினைக் (பெறுமதியுடன்)காட்டுவதுடன் ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்கின்றதா (+) அல்லது குறைவடைகின்றதா (–) என்பதை அந்தந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக. (இவ் வினாவிற்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.)

(ரூ.'000)

கொடுக்கல் வாங்கல் இல.	சொத்துக்கள்				பொறுப்புக்கள்		உரிமையாண்மை	
	ஆதனம், பொறி, இயந்திரம்	இருப்பு	வியாபார வருமதிகள்	காசு	வியாபார கொடுக்குமதிகள்	ஏனைய கொடுக்கும-திகள்	மூலதனம்	நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்கள்

(2) 31.01.2018 இல் முடிவடைந்த மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாளேடு

(3) 2018 ஜனவரி மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்று (வங்கிக்கூற்றின் படியான மீதியுடன் தொடங்கவும்) ***(மொத்தம் 15 புள்ளிகள்)***

4. மிதுனன் (PVT) ஆனது புத்தகக் களஞ்சியமொன்றை நடாத்துகிறது. 2018 மார்ச் மாதத்திற்கான இதன் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு :

	தொகை (ரூ.)
நாதன் வெளியீட்டாளருடனான கொடுக்கல் வாங்கல்கள்:	
கடனுக்குப் புத்தகங்கள் கொள்வனவு (விலைப்பட்டியல் இல. 15670)	550 000
விபரக்குறிப்புடன் ஒத்துப்போகாமையினால் திருப்பியனுப்பப்பட்ட புத்தகங்கள்	50 000
5% காசுக் கழிவுடனான காசுக் கொடுப்பனவு	475 000
காசுக்குப் புத்தகங்கள் கொள்வனவு	100 000
பட்டாம்பூச்சி வெளியீட்டாளருடனான கொடுக்கல் வாங்கல்கள் :	
கடனுக்குப் புத்தகங்கள் கொள்வனவு (விலைப்பட்டியல் இல. 13209) - பட்டியல் விலை	410 000
கழிக்கப்பட்ட வியாபாரக் கழிவு	10 000
காசுக் கொடுப்பனவு	300 000
காசுக்குப் புத்தகக் கொள்வனவு	150 000
விற்பனைகள் (விற்பனை விலையில் 20% இலாப எல்லையுடன்)	
காசு	800 000
கடன்	500 000
கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு	420 000
ஊழியர்களுக்குச் செலுத்திய சம்பளங்கள் :	
முகாமையாளர் - ஜேசுதாசன்	63 000
களஞ்சியக் காப்பாளர் - சிவபாலன்	45 000
விற்பனை உதவியாளர் - சுகைர்	27 000
செலுத்திய வாடகை	72 000

மேலதிக தகவல்கள் :

(i) அனைத்து ஊழியர்களுக்குமான 2018 மார்ச் மாதச் சம்பளங்கள், பின்வருவன கழித்த பின்னரே செலுத்தப்பட்டுள்ளன.

ஊழியர் சேமலாபநிதிக்கான பங்களிப்பு (EPF)	மொத்த சம்பளத்தில் 8%
ஊழியர் நலன்புரி நிதி (EWF) மாதாந்த பங்களிப்பு	மொத்த சம்பளத்தில் 2%

[பக் 8 ஐப் பார்க்க

(ii) கம்பனியானது ஊ.சே.நி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) மொத்தச் சம்பளத்தில் முறையே 12%, 3% பங்களிப்புச் செய்கிறது.

(iii) கம்பனியானது ஒவ்வொரு மாதத்துக்குமான ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் நலன்புரி நிதி ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளை அதன் அடுத்த மாதத்தின் 10ஆம் திகதி மேற்கொள்கிறது .

(iv) 01.03.2018 இலுள்ளபடியான சொத்துக்கள், பொறுப்புக்களின் கொண்டுசெல் மீதிகள்

விடயம்	ரூ.
புத்தக இருப்புக்கள்	150 000
வியாபார கொடுக்குமதிகள்	120 000
வியாபார வருமதிகள்	180 000
ஊழியர் சேமலாப நிதிக்கான (EPF) கொடுக்குமதி	30 000
ஊழியர் நம்பிக்கை நிதிக்கான (ETF) கொடுக்குமதி	4 500
ஊழியர் நலன்புரி நிதிக்கான கொடுக்குமதி	3 000
காசு	50 000

(v) புத்தகக் களஞ்சியமானது வாடகைக் கட்டடத்தில் பராமரிக்கப்படுவதுடன் செலுத்திய வாடகையானது 01.03.2018 இலிருந்து எதிர்வரும் ஆறு மாதத்திற்கான வாடகையுடன் தொடர்பானதாகும்.

வேண்டப்படுவது :

(1) கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் போன்ற அமைப்பைப் பயன்படுத்தி 2018 மார்ச் மாதத்திற்கான சம்பளப் பட்டியல்

ஊழியர் பெயர்	மொத்தச் சம்பளம் (ரூ.)	கழிப்பனவுகள் (ரூ.)		மொத்தக் கழிப்பனவுகள் (ரூ.)	தேறிய சம்பளங்கள் (ரூ.)	வேலைகொள்வோர் பங்களிப்புக்கள் (ரூ.)	
		EPF	ETF			EPF	ETF

(2) 31.03.2018 இல் முடிவடையும் மாதத்திற்கான ஊழியர் தொடர்பான மொத்தச் செலவுகள் (ஒவ்வொரு செலவு விடயத்தையும் தனித் தனியாகக் காட்டுக).

(3) 31.03.2018 இல் முடிவடையும் மாதத்திற்கான கொள்வனவு நாளேடு மற்றும் காசுக் கொடுப்பனவு நாளேடு

(4) 31.03.2018 இலுள்ளவாறான பின்வரும் சொத்துக்கள், பொறுப்புக்கள்
 (i) புத்தக இருப்பு
 (ii) வியாபார வருமதிகள்
 (iii) வியாபார கொடுக்குமதிகள்
 (iv) ஏனைய கொடுக்குமதிகள்
 (v) முற்செலுத்திய செலவுகள்

(மொத்தம் 15 புள்ளிகள்)

5. (அ) கம்பனியொன்று ரூ. 4 000 000 கிரயமான புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. இதன் பயன்தரு ஆயுட்காலம் 4 வருடங்களாகும். இச் செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதியானது (NPV), 10% கழிவீட்டு வீதத்தில் ரூ. 600 000 **நேர்க்** கணியமாகக் கணிக்கப்பட்டுள்ளது. எனினும், கணிப்பீட்டின்போது, பின்வரும் காசுப் பாய்ச்சல் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை என்பதை கம்பனியின் கணக்காளர் பின்னர் கண்டுபிடித்துள்ளார்.

விடய இல.	விபரம்	தொகை (ரூ.'000)
1	வருடாந்த செயற்பாட்டுக் கிரயச் சேமிப்புகள்	300
2	பழைய இயந்திரத்தின் விற்பனைப் பெறுமதி	200
3	செயற்றிட்ட இறுதிக்காலத்தில் புதிய இயந்திரத்தின் விற்பனைப் பெறுமதி	500
4	புதிய இயந்திரத்தை நிர்மாணிப்பதற்கான கட்டணங்கள்	1 200
5	மத்திய சூழல் அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய வருடாந்த சந்தா (முதலாம் வருடத்தின் இறுதியிலிருந்து செலுத்த வேண்டியவை)	200

[பக் 9 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

10% இல் கழிவீட்டுக் காரணிகள்:

வருடம்	0	1	2	3	4
10% கழிவீட்டுக் காரணி	1	0.91	0.83	0.75	0.68

வேண்டப்படுவது :

(1) விடய இலக்கம் 1 - 5 வரைக்குமான காசு உட்பாய்ச்சல்களை (+) எனவும் வெளிப்பாய்ச்சல்களை (–) எனவும் பெறுமதிகளுடன் காட்டுக. (பின்வரும் மாதிரியைப் பயன்படுத்துக.)

(ரூ.'000)

உருப்படி இல.	வருடங்கள்				
	0	1	2	3	4
1					
2					
3					
4					
5					

(2) செயற்றிட்டத்தின் 10% கழிவீட்டு வீதத்தில் திருத்தப்பட்ட தேறிய நிகழ்காலப் பெறுமதியும் சிபாரிசும்

(05 புள்ளிகள்)

(ஆ) பாடசாலையொன்றின் பழைய மாணவர் சங்கத்தின், 01.01.2017 இலுள்ளவாறான சுருக்கிய நிதி நிலைமைக் கூற்று பின்வருமாறு:

விபரம்	**ரூ.'000**
சொத்துக்கள் :	
ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல்மீது	4 500
காகிதாதிகள் இருப்பு	80
10% நிலையான வைப்பு	1 400
காசு	20
	6 000
உரிமையாண்மையும் பொறுப்புக்களும் :	
திரண்டநிதி	4 580
கட்டட நிர்மாண நிதி	1 400
சென்மதி மின்சாரக் கொடுப்பனவுகள்	20
	6 000

மேலதிக தகவல்கள் :

(i) சங்கமானது, 2017 ஆம் வருடத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் உட்பட 31.12.2017 இலுள்ளவாறு 800 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

(ii) கட்டட நிர்மாண நிதிக்காகப் பெறப்பட்ட காசைப் பயன்படுத்தி ஆறு மாத காலம் கொண்ட நிலையான வைப்புக் கணக்கொன்று 31.12.2016 இல் திறக்கப்பட்டது.

(iii) இவ்வருடத்தில் காசுப் பெறுவனவுகள் :

- 50 புதிய அங்கத்தவர்களிடமிருந்து ரூ. 1 000 வீதம் பிரவேசக் கட்டணங்கள் (எல்லா புதிய அங்கத்தவர்களும் 01.01.2017 இல் சங்கத்திற் சேர்ந்துள்ளனர்.)
- 640 அங்கத்தவர்களிடமிருந்து ஒருவருக்கு ரூ. 2 000 வீதம் வருடாந்த சந்தா பெறப்பட்டுள்ளது.
- நிலையான வைப்பானது 01.07.2017 இல் முதிர்ச்சியடைந்ததுடன் அதற்கான வட்டி வருமானத்துடன் பணம் பெறப்பட்டது.

(iv) இவ்வருடத்தில் கொடுக்குமதிகள் :

- 2016 டிசம்பர் மாதத்திற்குக் கொடுக்குமதியான ரூ. 20 000 உட்பட மின்சாரக் கட்டணம் ரூ. 120 000
- வருடாந்த பொதுக்கூட்டத்திற்கான உபசாரச் செலவுகள் ரூ. 170 000
- காகிதாதிகள் கொள்வனவு ரூ. 200 000 (31.12.2017 இலுள்ளவாறான காகிதாதிகள் இருப்பு ரூ. 40 000 ஆகும்.)
- பராமரிப்புச் செலவுகள் ரூ. 160 000
- நிலையான வைப்பு முதிர்ச்சியடைந்தமையினால் பெற்ற தொகையில் ரூ. 1 000 000 இனைப் பயன்படுத்திச் சங்கக் கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

/ பக் 10 ஐப் பார்க்க

(v) 31.12.2017 இல் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் புதிய கட்டடத்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் ஏற்பட்ட செலவுகள் ரூ. 550 000 ஆக இருந்துள்ளதுடன், அது 10.01.2018 இல் செலுத்தப்பட்டுள்ளது.

(vi) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வருடாந்த பெறுமானத் தேய்வு ரூ. 450 000 ஆக இருந்தது.

வேண்டப்படுவது:

பழைய மாணவர் சங்கம் தொடர்பில்:

(1) 31.12.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுக் கணக்கு

(2) 31.12.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று

(3) 31.12.2017 இலுள்ளவாறான உரிமையாண்மை (கீழே தரப்பட்டுள்ள மாதிரியை பயன்படுத்துக.)

விபரம்	உரிமையாண்மை விடயங்கள் (ரூ.'000)	
	திரண்ட நிதி	கட்டட நிர்மாண நிதி
01.01.2017 இல் மீதி	....	....
சேர்ப்புக்கள்:		
....	....	....
....	....	....
கழிப்பனவுகள் :		
....	....	....
....	....	....
31.12.2017 இல் மீதி	....	....

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

6. 31.03.2018 இலும் 31.03.2017 இலும் உள்ளவாறான பூரணம் PLC இன் சுருக்கிய நிதிநிலைமைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	**31.03.2018 இல் (ரூ.'000)**	**31.03.2017 இல் (ரூ.'000)**
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கொண்டுசெல் மீதி	28 000	19 000
இருப்புக்கள்	9 680	8 800
வியாபார வருமதிகள்	9 500	10 500
காசும் காசுக்குச் சமமானவைகளும்	5 020	2 200
மொத்தச் சொத்துக்கள்	**52 200**	**40 500**
கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள்	22 800	18 000
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	2 000	–
நிறுத்தி வைத்த வருவாய்கள்	5 200	2 500
நீண்டகாலக் கடன்கள்	10 500	10 100
வியாபாரக் கொடுக்குமதிகள்	8 600	8 100
வருமானவரிக்கான ஏற்பாடு	500	400
வங்கி மேலதிகப்பற்று	2 600	1 400
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்	**52 200**	**40 500**

மேலதிகத் தகவல்கள் :

(i) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரிக்கு முந்திய இலாபம் மற்றும் வரிக்குப் பிந்திய இலாபம் ஆகியன முறையே ரூ. 6 000 000, ரூ. 4 500 000 ஆகும்.

(ii) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான நீண்டகாலக் கடன் மீதான மொத்த வட்டிச் செலவு ரூ. 600 000 ஆகும். இது தொடர்பான சென்மதி வட்டியானது ரூ. 400 000 ஆக இருந்ததுடன் அது தவறுதலாக 31.03.2018 இலுள்ளவாறான நீண்டகாலக் கடனுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

[பக் 11 ஐப் பார்க்க

WWW.PASTPAPERS.WIKI

(iii) 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுமானத்தேய்வுச் செலவுகள் ரூ. 1 250 000 ஆகும். 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தில் புதிய மோட்டார் வாகனமொன்று காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் காணியானது முதற் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இது மிகையொன்றை ஏற்படுத்தியுள்ளது. இவ்வருடத்தில் வேறு எதுவித ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்ப்பனவுகளோ அகற்றல்களோ இடம்பெறவில்லை.

(iv) கம்பனியானது இவ்வருடத்தில் பங்குப் பொது வழங்கலைச் செய்துள்ளதுடன் 01.01.2018 இல் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபத்தையும் செலுத்தியுள்ளது.

(v) நீண்டகால தவணைக் கடனானது 31.03.2020 இலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது:

(1) LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இற்கமைய 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று (செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சலைக் கணிப்பதற்கு நேரில் முறையைப் பயன்படுத்துக.) **(10 புள்ளிகள்)**

(2) நடைமுறை வருடத்திற்கான பின்வரும் விகிதங்கள்:
- (i) நடைமுறை விகிதம்
- (ii) விரைவுச் சொத்து விகிதம்
- (iii) உரிமையாண்மையின் மீதான திரும்பல் விகிதம்
- (iv) கடன் - உரிமையாண்மை விகிதம்
- (v) வட்டிக் காப்பு விகிதம் **(05 புள்ளிகள்)**

(மொத்தம் 15 புள்ளிகள்)

7. (அ) தனிப் பொருளொன்றை உற்பத்திசெய்யும் கம்பனியொன்றின் வருடாந்த செயற்பாட்டு இயலளவு 1 500 அலகுகளாகும். 2019 ஆம் வருடத்தில் இந்தப் பொருள் தொடர்பான பாதீட்டுத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வருடாந்த உற்பத்தி மற்றும் விற்பனைகள்	1 200 அலகுகள்
அலகொன்றுக்கு ரூ. :	
விற்பனை விலை	1 200
நேர் மூலப்பொருள்	160
நேர் ஊழியம் (அலகு அடிப்படையில் செலுத்தப்பட்டது)	180
மாறும் உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள்	100
மாறும் உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயங்கள்	200
வருடாந்த நிலையான உற்பத்தி மேந்தலைகள்	ரூ. 132 000
வருடாந்த நிலையான உற்பத்தியல்லா மேந்தலைகள்	ரூ. 180 000

வேண்டப்படுவது:

(1) அலகொன்றிற்கான மாறும் கிரயம்

(2) அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம்

(3) அலகொன்றிற்கான இலாபம்

(4) 1 500 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்தக் கிரயம்

(05 புள்ளிகள்)

[பக் 12 ஐப் பார்க்க

(ஆ) கண்டியிலுள்ள கல்வி நிறுவனமொன்று கணக்கீட்டு டிப்ளோமா கற்கைநெறியொன்றை அறிமுகப்படுத்தத் திட்டமிடுகிறது. கற்கைநெறி வாடகைக் கட்டடமொன்றில் வார இறுதி நாட்களில் நடாத்தப்படும். இக்கற்கைநெறியானது 10 பாடங்களைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு பாடமும் 15 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். இக்கற்கைநெறியின் காலம் 6 மாதங்களாகும். மேலும் கற்கைநெறியின் நிறைவில் ஒவ்வொரு மாணவரும் செயற்றிட்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான பாதீட்டு வருமானம் மற்றும் செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வருமானம்:

கற்கைநெறிக் கட்டணம்	மாணவரொருவருக்கு	ரூ. 60 000
பரீட்சைக் கட்டணம்	மாணவரொருவருக்கு	ரூ. 5 000

செலவுகள் :

விரிவுரையாளருக்கான கொடுப்பனவுகள் :

- விரிவுரைக் கட்டணம்	மணித்தியாலமொன்றுக்கு	ரூ. 2 000
- ஒப்படை புள்ளியிடல் கட்டணம்	மாணவரொருவருக்கு, பாடமொன்றுக்கு	ரூ. 600
- செயற்றிட்ட அறிக்கை மதிப்பீட்டுக் கட்டணம்	அறிக்கை ஒன்றிற்கு	ரூ. 10 000
கற்றல் உபகரணக் கிரயம்	மாணவரொருவருக்கு, பாடமொன்றுக்கு	ரூ. 500
கற்கைநெறி முகாமையாளருக்கான சம்பளம்	மாதமொன்றுக்கு	ரூ. 45 000
கட்டட வாடகை	மாதமொன்றுக்கு	ரூ. 40 000
செயற்பாட்டுச் செலவுகள்	6 மாத காலத்திற்கு	ரூ. 70 000
பரீட்சைச் செலவுகள்	மாணவரொருவருக்கு, பாடமொன்றுக்கு	ரூ. 400

வேண்டப்படுவது :

(1) மாணவரொருவருக்கான பங்களிப்பு

(2) கற்கைநெறிக்கான மொத்த நிலையான கிரயம்

(3) கற்கைநெறியின் மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்காக பதிவுசெய்யப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை

(4) ரூ. 200 000 இலாபம் ஈட்டுவதற்கு கற்கைநெறியில் பதிவுசெய்யப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை

(5) எதிர்பார்க்கும் இலாபமும், பதிவுசெய்யப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையும் முறையே ரூ. 350 000, 30 ஆக இருப்பின், மாணவரொருவரிடமிருந்து அறவிட வேண்டிய ஆகக் குறைந்த கற்கைநெறிக் கட்டணம்

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

* * *

WWW.PASTPAPERS.WIKI

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

25% OFF ALL BOOKS

Including Exercise Books, CR Books, and B5 Books



ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 WWW.LOL.LK

071 777 4440 (WhatsApp)

Cash On Delivery Available

ORDER A/L TERM TEST PAPERS, SHORT NOTES, WORKBOOKS & REVISION BOOKS

SINHALA, ENGLISH & TAMIL MEDIUM

LOL BOOK STORE

CASH ON DELIVERY AND KOKO PAYMENT AVAILABLE

0717774440 (WHATSAPP)

WWW.LOL.LK